

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று முன்தினம் (11.9.2025) உலக நாயகன் கமல்ஹாசன் எம்.பி., இல்லத்திற்கு நேரில் சென்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் இன்று (13.9.2025) நடைபெறவுள்ள "சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு 50" பாராட்டு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (11.9.2025) இசைஞானி இளையராஜா எம்.பி., இல்லத்திற்கு நேரில் சென்று இன்று (13.9.2025) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெறவுள்ள "சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு 50" பாராட்டு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் முதலமைச்சரின் செயலாளர் முனைவர் ம.சு. சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் ஆகியோர் உள்ளனர்.

# கரூர் மாவட்டச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ., அறிக்கை!



கரூர், செப். 13 -

கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (13.09.2025 - சனிக்கிழமை) 10.00 மணிக்கு கரூர் மாவட்ட கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத் துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தகர் அணி துணை செயலாளர் வே.பல்லவி ராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அது சமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள், மாவட்ட, மாநகர அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

**பொருள்** : 1. செப் 15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் ஓரணியில் தமிழ்நாடு - வாக்குச்சாவடி அளவிலான உறுதிமொழி.

இவ்வாறு கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., தெரிவித்துள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் பாலாற்றின் குறுக்கே ரூ.22 கோடியில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட உயர்மட்ட பாலத்தை நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.எம்.கதிர் ஆனந்த் ,சி.என். அண்ணாதுரை, மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி, மாவட்ட ஆட்சியர் சிவ.சௌந்தர வல்லி, எம்.எல்.ஏ.க்கள் அ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன், அமுலுவிஜயன், மாதனூர் ஒன்றியக் குழுத் தலைவர் ப.ச.சுரேஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கரூரில் வருகின்ற செப்டம்பர் 17 அன்று நடைபெற விருக்கும், தி.மு.க. முப்பெரும் விழா ஏற்பாடுகள் குறித்தான, கரூர் சட்டமன்றத் தொகுதி செயல் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கூட்டம், கரூர் பிரேம் மகாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பெருந்திரளான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 9-இல் சோழவந்தான், மதுரை வடக்கு ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 13.09.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | சோழவந்தான் | ஜான்சி மஹால், வாடிப்பட்டி. |
| 14.09.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | மதுரை வடக்கு | ட்வின் மஹால், அண்ணாநகர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 10-09-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



ஆண்டிமடம் கிழக்கு ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.



கீழ்மலை வடக்கு ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



கரூர் மேற்கு ஒன்றியம்,
கரூர் மாவட்டம்.



சத்துவாச்சேரி தெற்கு பகுதி,
வேலூர் மாவட்டம்.



அரக்கோணம் நகரம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.



பெரணமல்லூர் பேரூர்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.